Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 203/2024** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father/Husband Name | : | தெய்வசிலையான் |
| Village | : | புத்தேந்தல் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் தாலுகா புத்தேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி ரஞ்சிதா என் மகள். சாட்சி செல்வம் என் அண்ணன் மகள். சாட்சி இராதா முத்து என் சம்பந்தி. சாட்சி ராஜேஸ்வரி என் மனைவி. ஆஜர் எதிரியை தெரியும். என் மகள் ரஞ்சிதாவின் கணவர். எதிரிக்கும் என் மகளுக்கும் திருமணம் நடைபெற்று இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். ஆஜர் எதிரி மீது நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். என் மகள் ரஞ்சிதாவுக்கும் எதிரிக்கும் சண்டை நடந்தது. கடந்த 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 12.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எதிரியின் அம்மா இராதா முத்து எனக்கு செல்போன் மூலம் என் மகளுக்கும் மருமகனுக்கும சண்டை நடப்பதாகவும்,

சண்டையை விலக்கிவிடும்படியும் சொன்னார். உடனே நானும் என் அண்ணன் மகன் செல்வமும் என் மருமகன் வீட்டிற்கும் சென்றோம். அங்கு போனபோது இருவரும் சத்தம்போட்டு கொண்டிருந்தனர். நானும் என் அண்ணன் மகனும் புருஷ்பொண்டாட்டி சண்டை போட்டு கொண்டிருந்ததால் தலையிடக்கூடாது என்று வெளியில் நின்றுகொண்டிருந்தோம். அந்த சமயத்தில் எதிரியின் தாயார் ராதாமுத்துவும் எங்களோடு இருந்தார். எதிரி என் மகளை இடது பக்க தலையில் சுத்தியலால் அடித்துவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு ஊர்க்காரர்கள் மூலம் போன் செய்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு பார்க்க முடியாது என கூறிவிட்டதால் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டுபோய் சிகிச்சையில் சேர்த்தோம். இதுசம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது இராமநாதபுரம் பஜார் போலிசார் வந்து விசாரித்து நான் கொடுத்த வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுதது என் கையெழுத்துதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. இதுசம்பந்தமாக பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

இல்லை

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 203/2024** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரஞ்சிதா |
| Father/Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | புத்தேந்தல் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(எதிரி ஆஜர். .)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் தாலுகா புத்தேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என் கணவர். அவர் கவரன்குளம் கிராமத்தை சேர்ந்தவர். எனக்கும் என் கணவருக்கும் திருமணமாகி ஒன்பது வருடங்களாகிறது. எனக்கும் என் கணவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள். அ.சா.1 ஆறுமுகம் என் அப்பா. சாட்சி செல்வம் என் பெரியப்பா மகன். சாட்சி இராதாமுத்து என் மாமியார். சாட்சி ராஜேஸ்வரி என் அம்மா. நான் என் கணவருடன் கவரன்குளத்தில் வசித்து வரும்போது என் கணவர் என் மீது சந்தேகப்பட்டு அடிக்கடி திட்டி சண்டைபோடுவார். அதனால் நான் அவ்வப்போது கோபித்து கொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன். என் பெற்றோர் மற்றும் பெரியப்பா என்னை சமாதானப்படுத்தி அனுப்பி வைப்பார்கள். மறுபடியும்

சந்தேகப்பட்டு சண்டைபோடுவதால் மீண்டும் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன். கடந்த 26.10.2023ம் தேதி இரவு 12.30மணியளவில் நான் என் கணவர் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது என் கணவர் என்னை சந்தேகப்பட்டு திட்டினார். அப்போது என் மாமியார் இராதா முத்து வந்து ஏன் தேவையில்லாமல் பொண்டாட்டியை சந்தேகபட்டு திட்டுகிறாய் என்று கேட்டார். கேட்டதற்கு எதிரி அப்படித்தான் திட்டுவேன் என சொன்னதால் என் மாமியார் என் அப்பா அம்மாவிற்கு தகவல் சொல்லி வீட்டிற்கு வரச்சொன்னார். என் அப்பாவும், என் பெரியப்பா மகன் செல்வமும் வந்து வீட்டிற்கு வெளியில் என் மாமியாருடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது என் கணவர் பேசிக்கொண்டிருந்தபோதே சுத்தியலை எடுத்து என் இடது பக்க தலையில் அடித்து கீழே சாய்த்துவிட்டு ஓடிவிட்டார் என் சத்தம் கேட்டு வெளியில் நின்றுகொண்டிருந்த என் அப்பா, அண்ணன் செல்வம், மாமியார் உள்ளே வருவதற்குள் நான் மயங்கி விழுந்துவிட்டேன். என் கணவர் சுத்தியலால் அடிக்கும்போது செத்துப்போடி என்று சொல்லி அடித்தார். அதன்பிறகு ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிறகு மூன்று நாட்கள் கழித்து மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்தபிறகு எங்கள் வீட்டிற்கு வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் உள்ள சுத்தியலால்தான் என் கணவரான எதிரி அடித்தார். அந்த சுத்தியல் **அ.சா.பொ.1.** சம்பவம் குறித்து என் அப்பா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:—

இல்லை

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.